


# வண்ணமயமானக் கனவுகள்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

சின்னஞ்சிறு பூவைப் போன்றவள் அந்தப்பெண் குழந்தை. அவள் பெயர்தான் நிலா. அவளது உலகம் ஆச்சரியங்களால் நிறைந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு புதிய அதிசயம் அவளைக் கவர்ந்திழுக்கும்.







நேற்று வண்ணத்துப்பூச்சியின் சிறகசைவில் மயங்கி, தானும் ஒரு பட்டாம்பூச்சியாக மாற ஆசைப்பட்டாள். "அம்மா, நானும் வண்ணத்துப்பூச்சி மாதிரிப் பறக்கட்டுமா?" என்று கேட்டாள் குதூகலமாக.





மறுநாள், பக்கத்து வீட்டு அக்கா வரைந்த ஓவியத்தைப் பார்த்து வியந்தாள். அந்த வண்ணங்களின் ஜாலமும், கோடுகளின் அழகும் அவளைக் கட்டிப்போட்டது. உடனே, "நானும் ஓவியம் வரையப் போகிறேன் அம்மா! பெரிய பெரிய ஓவியங்கள் வரைந்து எல்லாரையும் அசத்தப் போறேன்!" என்று கையில் கிடைத்த கரிக்கோலை எடுத்து காகிதத்தில் கிறுக்க ஆரம்பித்தாள்.





www.worldtamilacademy.com



இப்படி ஒவ்வொரு நாளும் நிலாவின் லட்சியங்கள் வானவில்லின் நிறங்களைப் போல மாறிக்கொண்டே இருந்தன. ஒருநாள் சமையலறையில் அம்மா இட்லி ஊற்றுவதைப் பார்த்து, "நானும் சமையல்காரி ஆகப் போகிறேன்! சுவையான இட்லி, தோசை எல்லாம் செய்து எல்லாரையும் சந்தோஷப்படுத்தப் போகிறேன்!" என்றாள்.





அடுத்த நாள் தாத்தா சொல்லும் கதைகளில் வரும் ராஜா, ராணிகளைப் பார்த்து, "நான் ஒரு இளவரசி! தங்கக் கிரீடம் அணிந்து கொண்டு, ஊரெங்கும் பவனி வரப்போகிறேன்!" என்று கற்பனை செய்தாள்.





ஆனால், நிலாவின் இந்தக் கனவுகள் எல்லாம் ஒரு நாள் கூட நிலைத்திருக்கவில்லை. புதிதாக ஒன்றைப் பார்த்ததும் பழைய ஆசை மறந்து போகும். அவளது அம்மா இதையெல்லாம் கவனித்து சிரித்துக் கொள்வார்.







ஒருநாள் நிலா தன் வீட்டுத் தோட்டத்தில் பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றும் தோட்டக்கார அக்காவைப் பார்த்தாள். அந்த செடிகளின் பசுமையும், பூக்களின் அழகும் அவளைப் பரவசப்படுத்தியது. "அம்மா! அம்மா! நானும் ஒரு தோட்டக்காரி ஆகப்போகிறேன்! இந்தச் செடிகளுக்கெல்லாம் நானே நீர் ஊற்றுவேன்! பூக்களைத் பறித்து உனக்குத் தருவேன்!" என்று சந்தோஷமாகச் சொன்னாள்.





மறுநாள் காலையில் நிலா வீட்டின் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது அவளது மாமா வெள்ளை நிறச் சீருடை மற்றும் தொப்பி அணிந்து வந்தார். அந்த உடையின் கம்பீரமும், அவர் நடந்த விதமும் நிலாவைக் கவர்ந்தது





"அம்மா! மாமா எதற்காக இந்த மாதிரியான உடையை அணிந்திருக்கிறார்கள்? மாமா என்ன வேலை செய்கிறார்கள்?" என்று ஆர்வத்துடன் கேட்டாள். "மாமா ஒரு விமான ஓட்டுனர். அவர் தான் விமானத்தை இயக்கி, பல்வேறு ஊர்களுக்குப் பயணம் செய்கிறார்கள்,“ என்று மென்மையாகக் கூறினாள் அம்மா.









உடனே நிலாவின் கண்கள் மகிழ்ச்சியில் மின்னியது. "அப்படியா! நான் ஒரு விமான ஓட்டி ஆகப்போகிறேன்! பெரும் விமானம் ஒன்றை இயக்கிக் கொண்டு, தினந்தோறும் புதிய புதிய ஊர்களுக்குப் பயணிப்பேன்! வானில் பறப்பது எவ்வளவு அதிசயமான அனுபவமாயிருக்கும்!" என்று கூறியவள் கைகளை விரித்து வானத்தை நோக்கிப் பார்த்தாள்.





நிலாவின் இந்த அடிக்கடி மாறும் லட்சியங்களைப் பார்த்து அவளது அம்மா மென்மையாகச் சொன்னார், "நிலாக் குட்டி, நீ சொல்கிற எல்லா கனவுகளும் மிகவும் அழகாகவும் அருமையாகவும் இருக்கின்றன. ஆனாலும், அவை எல்லாம் நடக்க, முதலில் நீ பள்ளிக்குப் போக வேண்டும்,"







அன்று மாலை நிலாவின் அக்கா பள்ளி முடிந்து சந்தோஷமாக வீட்டுக்கு வந்தாள். அவள் கையில் வைத்திருந்த புத்தகங்களையும், தோழிகளுடன் சிரித்துப் பேசியதையும் நிலா ஆச்சரியமாகப் பார்த்தாள். அக்காவைப் பார்த்ததும் நிலாவின் மனதில் ஒரு புது ஆர்வம் துளிர்விட்டது. "அம்மா! நானும் பள்ளிக்குச் செல்கிறேன்!" என்று துள்ளிக் குதித்தாள்.





www.worldtamilacademy.com



மறுநாள் காலையில் நிலா புது யூனிஃபார்ம் அணிந்து கொண்டு, புத்தகப் பையை மாட்டிக்கொண்டு, ஆர்வமாக பள்ளிக்குக் கிளம்பினாள். அவளது சின்னஞ்சிறு மனதில் இப்போது புதியதொரு லட்சியம்!. பள்ளிக்கூடம் அவளுக்கு எத்தனை ஆச்சரியங்களையும், கனவுகளையும் கொடுக்கப் போகிறதோ என்று எண்ணி அவள் பூரித்து போனாள்.



www.worldtamilacademy.com

அன்று முதல் நிலாவின் ஒவ்வொரு நாளும் புதிய பாடங்களையும், புதிய நட்புகளையும், புதிய லட்சியங்களுக்கான விதைகளையும் தூவ ஆரம்பித்தது. அவளது வண்ணமயமான கனவுகளுக்கு ஒரு அழகான தொடக்கம் கிடைத்தது.





உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com